20th March 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, இதெல்லாம் இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு ஏற்பட வேண்டிய சர்ச்சைகள். கிராமங்களில் கொடுக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அரசாங்கம் எடுக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், சென்ற ஆண்டு ஏற்பட்ட நெருக்கடி நிலே காரணமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட நெருக்கடி ஏற்படாது என்கிற உறுதியை மக்களுக்குச் சர்க்கார் கொடுக்க முன்வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் உறுதிமொழி சொல்வதை விட, திரும்பத் திரும்பக் கேட்கப்பட்ட கேள்வியெல்லாம், அங்கத்தினர் கவனித்து இருந்தால் தெரிந்திருக்கும். அரசாங்கம் என்னென்ன செய்கிறது என்று. போதுமான நெல்லை கைவசம் வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும், நீலகிரி ஜில்லாவைத் தவிர, கொள்முதல் செய்து, தேவைப்படும் இடங்களுக்கு, லீன் மாதங்களில் கொடுக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மொத்த விற்பனை அரிசி வியாபாரிகள்

* 291 கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் அரிசி விற்பனைக்கென்று இருக்கிற மொத்த வியாபாரிகள் எத்தனை பேர் ?

(இ) கூட்டுறவு மொத்த வியாபாரக் கடைகள் எவை எவை ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 10 (Ten).

(*b*) (1) Madras State Co-operative Marketing Society, 379, N.S.C. Bose Road, Madras.

(2) Park Town Co-operative Wholesale Stores, Ltd., 29, Ekambareswarar Agraharam, Madras-3.

(3) Triplicane Urban Co-operative Society, Ltd., 109, Big Street, Madras-5.

(4) Chingleput District Co-operative Supply and Marketing Society, Kandappa Chetty Street, Madras-1.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த ஹோல்சேல் வியாபாரிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : புதிதாகத் தேர்ந்து எடுக்கப்படவில்லை. முன்கூட்டியே எடுக்கப்பட்டவர்கள் தான். அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதிலளிக்கலாம்.

மாவட்டங்களிடையே உணவு தானியங்கள் கொண்டு போதல்

* 292 கேள்வி—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா —

தமிழ்நாட்டில் உள்ள உணவு தானியங்கள் ஒரு மாவட்டத்தில் இருந்து வேறு ஒரு மாவட்டத்திற்குக் கொண்டு செல்லக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தது உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : Yes.

திரு. பி. முருகையன் : சார், என்னுடைய ஆலங்குடி பிர்க்காவில் கொஞ்சம் காவேரித் தண்ணீர் பாய்கிறது. அங்கிருந்து நெல்லைக் கொண்டு வர தஞ்சை ஜில்லா குறுக்கே நிற்கிறது. ஆகவே அங்கு செக்போஸ்ட் போட்டிருக்கிறார்கள். அதில் அமைச்சர் அவர்கள் இனிமேலாவது கவனம் செலுத்தி, அந்த இடத்தில் கிராம அதிகாரிகள் கொடுக்கும் சர்டிபிகேட்டை வைத்துக்கொண்டு நெல் கொண்டு வர அரசாங்கம் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினருடைய பகுதியில் குறிப்பிட்ட சிறு பகுதியில் காவேரித் தண்ணீர் பாய்ந்து, கொஞ்சம் விவசாயம் நடக்கிறது. ஆம், தஞ்சை ஜில்லா குறுக்கே நிற்கிறது. உற்பத்தி செய்த நெல்லைக் கொண்டு போக சம்பந்தப்பட்ட டி.எஸ்.ஓ. விடம் மனுக் கொடுக்கவேண்டும். கிராம அதிகாரி-திருச்சி ஜில்லா, ஆலங்குடி தாலுகா நெல் என்று அனுமதிச் சீட்டு கேட்டால், கொடுப்பார்கள். அதன் மேல் டி.எஸ்.ஓ. வால் தக்க உதவி செய்யப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, தாலுகாவிற்குத் தாலுகா தானியங்களைக் கொண்டு போகக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறதே, அதை நீக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கும் முறையில் தாலுகாவிற்குத் தாலுகா போகக் கூடாது என்று தடை விதிக்கப் பட்டிருக்கிறது. அதை அகற்ற யோசனை இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, இந்த ஒவ்வொரு மாவட்டத்திற்குள்ளும் எடுத்துப் போகக்கூடாது என்கிற தடை இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மதுரை, கோவை போன்ற நகரங்களுக்கு கொள்முதல் செய்யலாம் என்று அனுமதி இருந்தபோதிலும், கொள் முதல் செய்யவில்லை. அப்படிக் கொள்முதல் செய்வதை துரிதப்படுத்தினால், நிர்ணயித்த விலை கிடைக்கும். ஆகவே உடனடியாக ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : மதுரைக்குத் தேவையானது, கலெக்டர் கேட்டு, அரசாங்கம் ஒரு கோட்டா கொடுத்திருக்கிறது. அங்கே வியாபாரிகள், கூட்டுறவுச் சங்கங்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். வாங்கவில்லை என்றால், உடனே கலெக்டர் நடவடிக்கை எடுப்பார்கள். அதிலும் கஷ்டம் இருந்தால் தஞ்சை கலெக்டர் கணக்கில் வாங்கி, மற்ற மாவட்டங்களுக்குக் கொடுப்பார்கள். அதில் கஷ்டம் இல்லை.

9-30 a.m. **புலவர் கா. கோவிந்தன் :** சொந்தத்திற்கு அரிசி எடுத்துக்கொண்டு செல்வது என்றால், ஒரு மாநிலத்துக்குள்ளே எடுத்துச் செல்வதற்கு தாசில்தார் பர்மிட் கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் பர்மிட் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பர்மிட் பெறக் கொஞ்சம் கால தாமதம் ஆகிறது. ஆகவே, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரே அந்த பர்மிட்டும் கொடுக்கலாம் என்ற வகையில் தற்போதைய உத்தரவை மாற்றியமைக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : வெளி மாநிலத்திற்குப் போக வேண்டுமென்றால், கண்காணிப்பாக இருப்பது நல்லது தான்.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, "கிராம அதிகாரிகளிடமிருந்தோ, தாலுகா ஸப்ளை ஆபீசரிடமிருந்தோ பெற்ற சர்டிபிகேட் வைத்திருந்தால் அவர்கள் விட்டு விடுவார்கள்" என்று கூறுகிறார்கள். ஆனால், தஞ்சை மாவட்டக் கலெக்டர் அவர்கள், இம்மாதிரி நிலையில் கூட விட்டுவிடக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருப்பதாக செக் போஸ்ட் அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே,

20th March 1965]

அதில் தனிப்பட்ட கவனம் செலுத்தி, அந்த நெல்லைக் கொண்டு செல்ல அனுமதிக்க இனிமேலாவது தஞ்சை கலெக்டருக்கு உத்தரவு பிறப்பிக்கப் படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : செக் போஸ்டில் உள்ளவர்களுக்கு, ஆலங்குடி தாலுக்காவில் விளைந்த நெல்லா அல்லது தஞ்சை ஜில்லாவில் விளைந்த நெல்லா என்று தெரியாது. அதனுல் அவர்கள் விடமாட்டார்கள். அந்தக் கிராமத்திலிருந்து எடுத்துக்கொண்டு போவதற்கு முன்னுல், இந்த நெல் எங்கே உற்பத்தி செய்தது என்பதற்கு அத்தாட்சிச் சீட்டு வாங்கும் பட்சத்தில் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன். அப்படியும் அனுமதிக்க வில்லையென்றுல், கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும்.

திரு. எஸ். மணி : எங்கள் பகுதியிலுள்ளவர்கள் கொத்தமல்லி, வெங்காயம், மிளகாய், முதலியவற்றை அடுத்த மாவட்டத்திற்குக் கொண்டு போய்க்கொடுத்து, அங்கிருந்து நெல் முதலியவற்றை வாங்கிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. இப்படி ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு வேறு பொருள்கள் மாற்றிக்கொண்டுவர வேண்டிய நிலை இருக்கிறது. ஆனுல் வழியில் பல செக் போஸ்ட்கள் இருப்பதால் மக்கள் பாதிக்கப்படுகிறுர்கள். இதற்கு வழிவகை செய்து கொடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள், இரண்டு மூன்று தடவை இந்தச் சட்ட மன்றத்தில் இந்தப் பண்டமாற்றுதல் முறையைத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறுர்கள். இங்கே இதைக் கூறிவிட்டதோடு விட்டுவிடாமல், தொடர்ந்து அதில் இருக்கும் பல்வேறு பிரச்னைகளை எழுதி திருச்சி ஜில்லா கலெக்டருக்குக் கொடுக்கும்பட்சத்தில் அவர்கள் பரிசீலனை செய்வார்கள். அவரால் முடியவில்லை யென்றுல், அதற்குப் பிறகு என்னிடம் கொடுத்தால் நான் அதிலே கவனம் செலுத்த முடியும்.

திரு. கரு. சிமைச்சாமி : அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது, "இன்னும் மூன்று மாதங்களில் உணவுப் பஞ்சம் வரும்" என்று சொன்னுர்கள். ஆகவே, மக்கள் பீதியடையாமலிருக்க அரசாங்கம் அதற்கு என்ன முன் ஏற்பாடுகள் செய்திருக்கிறுர்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் இதுபோல் கேட்காமலிருந்தால் மக்கள் பீதியடைய மாட்டார்கள். கனம் அங்கத்தினர் போன்றவர்கள் "உணவுப் பஞ்சம் வரவேண்டும், நெருக்கடி ஏற்பட வேண்டும்" என்று நினைத்தால்கூட அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உணவுப் பஞ்சம் உண்டாவதை ஒரு பொழுதும் அது பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. உணவுக் கஷ்டம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு கஷ்டத்திற்குமிடையே உணவு தானியங்களை ஆங்காங்கு சேமித்து வைத்திருக்கிறுேம். இந்த வருஷம் இனிமேல் உணவுப் பஞ்சம் வராது.

திரு. வை. சங்கரன் : கேழ்வரகு, சோளம் போன்ற கோர்ஸ் க்ரெயின்களை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்குத் தடை கிடையாது என்று நினைக்கிறேன். இப்பொழுது ஒரு சில மாவட்டங்களில் உள்ள சப்ளை ஆபீசர்கள் அவற்றைக்கூட எடுத்துக் கொண்டு போகக்கூடாது என்று தடை விதிப்பதாகத் தெரிகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த விளக்கம் கூற முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : "கோர்ஸ் க்ரெயின்" என்றுலும் கூட, அதுவும் கட்டுப்பாடு இல்லாமல் வெளியே போக முடியாது. மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கானுலும் சரி, ராஜ்யத்தை விட்டு வெளியே போக வேண்டுமென்றுலும் சரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பர்மிட் வாங்கியாக வேண்டும்.

[20th March 1965

திரு. ர. ஜீவரத்னம் : எங்கள் ஜில்லாவில் உள்ள பக்தர்கள் திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீபெரும்புதூர் போன்ற இடங்களில் உற்சவ காலங்களில் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்வது வழக்கம். கடந்த ஆண்டு தடையுத்தரவின் காரணமாக அந்த அன்னதானம் திருப்பதி, திருச்சானூர் போன்ற இடங்களில் *தடைபட்டு போய்விட்டது. அம்மாதிரி பக்தர்கள் அன்னதானம் செய்யவேண்டுமென்றால் அதற்குரிய மனுக்களை அனுப்பினால் கலெக்டர் பரிசீலனை செய்து அனுமதி வழங்கவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அதுபோன்ற நல்ல காரியங்கள் செய்வதற்கு உண்மையிலேயே யாரேனும் முயற்சி எடுத்திருப்பவர்கள் இதற்கு முன்பு எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவர்கள் கவனிப்பார்கள்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note:*—An asterisk at the commencement of a speech indicates revision by the Member.]

II. ANNOUNCEMENTS.

(1) Hours of sitting of the Assembly on 22nd March 1965.

9-30 a.m. Mr. SPEAKER : Under Rule 20 of the Legislative Assembly Rules, I have to announce to the House that the Assembly will sit from 2 p.m. to 7 p.m. on the 22nd March 1965 instead of from 8-30 a.m. to 1.30 p.m.

(2) Business of the House.

Mr. SPEAKER : I have also to announce to the Houes that the Madras General Sales Tax (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 6 of 1965) will be taken up for consideration as the first item after question hour on the 29th March 1965. Discussion on the Official Language Policy will take place on the 1st and 3rd April 1965, as the 2nd April 1965 is a public holiday.

Sri A. G. BALAKRISHNAN : Sir, on a point of order. திங்கட்கிழமை மாலை 2 மணியிலிருந்து இரவு 7 மணி வரைக்கும் சட்டமன்றக் கூட்டம் நடைபெறும் என்று தாங்கள் அறிவித்தீர்கள். அதற்குக் காரணம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

Mr. SPEAKER : It is not a point of order. I have referred to Rule 20 and let the hon. Member, Sri Balakrishnan, please read that Rule.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66.

DEMAND NO. III—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES —ADMINISTRATION.

* The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,06,42,900 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration'.